பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

1. மல்லி சென்ற இடம் கடற்கரை. ☐
2. மல்லி கண்டது கனவு. ☐
3. மல்லி. பூங்காவில் பூக்களைப் பறித்தாள். ☐
4. மல்லி தண்ணீர் வீணாகாமல் தடுத்தாள். ☐
5. மல்லியை எழுப்பியவர் அப்பா. ☐

பொருத்துக

1.	பூக்கள்	–	குப்பையைத் தொட்டியில் போடுவீர்
2.	ஊஞ்சல்	–	பூக்களைப் பறிக்காதீர்
3.	தண்ணீர்க்குழாய்	–	உணவை வீணாக்காதீர்
4.	குப்பைத்தொட்டி	–	மற்றவருக்கும் வாய்ப்பு அளிப்பீர்
5.	உணவு மேசை	–	தண்ணீரை வீணாக்காதீர்

வாய்மொழியாக விடை தருக

1. மல்லி பூங்காவில் என்னென்ன செய்தாள்?
2. இக்கதையிலிருந்து நீ அறிந்தவற்றைக் கூறுக.
3. மல்லியின் எந்தச் செயல் உனக்குப் பிடித்திருக்கிறது?

விடை எழுதுக

1. உணவைக் கீழே இறைக்கக்கூடாது ஏன்?
2. பூங்காவில் எழுதப்பட்டிருந்த ஏதேனும் இரண்டு அறிவிப்புகளை எழுதுக.

இவை பேசினால் என்ன பேசியிருக்கும்? படத்துடன் பொருத்து

படிகளில் பயணம் செய்யாதீர்

பயணச்சீட்டு வாங்குவீர்

வரிசையில் நின்று ஏறுவீர்

கரம், சிரம், புறம் நீட்டாதீர்

பொருத்தமான பெயரை உரிய கடையில் எழுதுக

உணவகம் | இனிப்பகம் | பல்பொருள் அங்காடி | ஆடையகம்

LIVEWORKSHEETS